[24th January 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கு ஒரு சாதாரண கேஸ் வந்தாலும், பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். ஆகவே மதுரை ஜில்லாவிலுள்ள தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அந்த மாதிரி உத்தேசம் இல்லை.

State Transport Buses

* 82 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total strength of fleet as on 1st June 1963 operating on the Madras City routes of the State Transport system;

(*b*) the programme for increasing the fleet strength during 1963–64; and

(*c*) whether this programme is affected in any manner due to the emergency?

THE HON. SRI R. VENKATARAMAN :

	BUSES.
(*a*) City routes	467
Suburban services	173
Total ...	640

	BUSES.
(*b*) City fleet to be augmented by	60
Suburban services to be augmented by	25
Total ...	85

(*c*) Care has been taken to see that the programme for augmentation is not affected as far as possible.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நகரத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெருக்கடியை சமாளிப்பதற்கு இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ்களை அதிகப்படுத்துவதுதான் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கு முறை. அதற்காகத்தான் இந்த புரோகிராமைப் போட்டிருக்கிறோம்.

24th January 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : பிரேக்டவுன்களைத் தவிர்த்து ஒவ்வொரு பஸ்ஸும் அதிக டிரிப்புகள் ஓடுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்கு நம்முடைய பஸ் ஆப்பரேஷன் 85 சதவிகித எபிஷியன்ஸியில் ஓடுகிறது. அதாவது, 100 பஸ்கள் இருந்தால் 85 பஸ்கள் இன்றைக்கு ரூட்டில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு பஸ் எப்பொழுதாவது பிரேக்டவுன் ஆகிவிட்டது என்று சொல்லி, அதைப் பிரமாதமாக ஒருவர் சட்டசபையிலே சொல்ல, அதற்கு பத்திரிகையிலே விமர்சனம் கொடுப்பது ஜனங்களுக்கு தவறுதலான ஒரு அபிப்பிராயத்தைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : பொதுவாக நமது மாநிலத்தில் எல்லா மார்க்கங்களிலும் இப்பொழுது இருப்பதைவிட 10 சதவிகிதம் பஸ் ரூட்டுகளை அதிகரிப்பதற்கு உத்தேசமிருக்கிறது என்று தொழில்மைச்சர் அவர்கள் கூறியதாகத் தெரிகிறது. எப்பொழுது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறேன். அதைப் பற்றி விமர்சனம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு பஸ்களை மட்டும் அதிகப்படுத்தினால் போதும் என்று நினைக்கிறார்களா ? அல்லது வேறு வசதிகள் செய்து கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரிலே வேறு வசதி இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சென்னை நகர சுற்றுப்புறத்தில் தொழில் வளர்ச்சியின் காரணமாக நகர அமைப்பு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே ஸபர்பன் போக்குவரத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது ஸபர்பன் சர்விஸிலே 173 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. நேஷனலைஸ் பண்ணும்படியான உத்தேசமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முன்பு சில சுற்றுப்புற மார்க்கங்களில் தனியார் துறையும், அரசாங்கத் துறையும் போட்டியிட்ட காரணத்தால் சில தனியார் துறை ரூட்டுக்களை அரசாங்கத் துறைக்குக் கொடுக்கும் நோக்கத்தோடு நடந்துகொண்டதைப் போல, இந்த சுற்றுப்புற சர்விசையும் அரசாங்கம் ஏற்று நடத்த முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தெந்த இடங்களில் புதிதாக பஸ் வேண்டுமோ, அங்கெல்லாம் சர்க்கார் பஸ்கள் விடுகிறார்கள். இருக்கிற பஸ்களை நேஷனலைஸ் செய்யவில்லை என்று சொன்னேன்.